# இன்றைய இறைவார்த்தை

# 05-12-2014

**திருவருகைக்காலம் – 1ஆம் வாரம் – வெள்ளிக்கிழமை**
**முதலாம் ஆண்டு**

## முதல் வாசகம்:

ஆண்டவருக்குரிய நாளில், பார்வையற்றோரின் கண்கள் பார்வை பெறும்.

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்: **29 : 17 – 24**

இறைவனாகிய ஆண்டவர் கூறுவது: “இன்னும் சிறிது காலத்தில் லெபனோன் வளம்மிகு தோட்டமாக மாறுமன்றோ? வளம்மிகு நிலம் காடாக ஆகிவிடுமன்றோ? அந்நாளில் காது கேளாதோர் ஏட்டுச் சுருளின் வார்த்தைகளைக் கேட்பர். பார்வையற்றோரின் கண்கள் காரிருளில் இருந்தும் மையிருளில் இருந்தும் விடுதலையாகிப் பார்வை பெறும். ஒடுக்கப்பட்டோர் மீண்டும் ஆண்டவரில் மகிழ்ச்சி பெறுவர். மானிடரில் வறியவர் இஸ்ரயேலின் தூயவரில் அகமகிழ்வர். கொடியோர் இல்லாதொழிவர். இகழ்வோர் இல்லாமற் போவர். தீமையில் நாட்டம் கொள்வோர் அழிந்து போவர். அவர்கள் ஒருவர் மேல் பொய்க் குற்றம் சாட்டி, நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்குவோரை இடறச் செய்கின்றனர். பொய் புனைந்து நேர்மையாளரின் வழக்கைப் புரட்டுகின்றனர்.

ஆதலால் ஆபிரகாமை மீட்ட ஆண்டவர் யாக்கோபு வீட்டாரைப்பற்றிக் கூறுவது: “இனி யாக்கோபு மானக்கேடு அடைவதில்லை. அவன் முகம் இனி வெளிறிப் போவதுமில்லை. அவன் பிள்ளைகள் என் பெயரைத் தூயதெனப் போற்றுவர். நான் செய்யவிருக்கும் என் கைவேலைப் பாடுகளைக் காணும்போது யாக்கோபின் தூயவரைத் தூயவராகப் போற்றுவர். இஸ்ரயேலின் கடவுள்முன் அஞ்சி நிற்பர். தவறிழைக்கும் சிந்தைகொண்டோர் உணர்வடைவர். முறுமுறுப்போர் அறிவுரையை ஏற்றுக்கொள்வர்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

## பதிலுரைப்பாடல்:

திருப்பாடல்கள்: **27 : 1, 4, 13 – 14** (பல்லவி **1**)
பல்லவி: ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு.

**1.** ஆண்டவரே என் ஒளி. அவரே என் மீட்பு. யாருக்கு நான் அஞ்சவேண்டும்? ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம். யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்? பல்லவி

2. நான் ஆண்டவரிடம் ஒரு விண்ணப்பம் செய்தேன். அதையே நான் நாடித் தேடுவேன். ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும், ஆண்டவரின் அழகை நான் காணவேண்டும். அவரது கோவிலில் அவரது திருவுளத்தைக் கண்டறிய வேண்டும். பல்லவி

3. வாழ்வோரின் நாட்டினிலே ஆண்டவரின் நலன்களைக் காண்பேன் என்று நான் இன்னும் நம்புகின்றேன். நெஞ்சே! ஆண்டவருக்காகக் காத்திரு. மன உறுதிகொள். உன் உள்ளம் வலிமை பெறட்டும். ஆண்டவருக்காகக் காத்திரு. பல்லவி

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:

அல்லேலூயா, அல்லேலூயா!
இதோ, நம் ஆண்டவர் வல்லமையுடன் வருவார். தம் ஊழியரின் கண்களுக்கு ஒளி தருவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்:

இயேசுவை நம்பி, பார்வையற்ற இருவர் பார்வை பெறுகின்றனர்.

தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: **9 : 27 – 31**

அக்காலத்தில் இயேசு தம் சொந்த ஊரை விட்டு வெளியே சென்றபோது பார்வையற்றோர் இருவர், "தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும்" என்று கத்திக் கொண்டே அவரைப் பின்தொடர்ந்தனர். அவர் வீடு வந்து சேர்ந்ததும் அந்தப் பார்வையற்றோரும் அவரிடம் வந்தனர்.

இயேசு அவர்களைப் பார்த்து, "நான் இதைச் செய்ய முடியும் என நம்புகிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஆம், ஐயா" என்றார்கள். பின்பு அவர் அவர்களின் கண்களைத் தொட்டு, "நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும்" என்றார். உடனே அவர்களின் கண்கள் திறந்தன. இயேசு அவர்களை நோக்கி, "யாரும் இதை அறியாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்" என்று மிகக் கண்டிப்பாகக் கூறினார். ஆனால் அவர்கள் வெளியே போய் நாடெங்கும் அவரைப் பற்றிய செய்தியைப் பரப்பினார்கள்.

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும் என்று செபிக்கின்ற இந்த வாரத்தில், அற்புதமான ஒரு சாட்சியம் பார்வையற்ற மனிதனின் வாழ்வு. செய்ய முடியும் என்று நம்புகின்றீர்களா என்று கேட்டு, நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும் என்று வாழ்த்தி சுகம் தருவதாக பார்க்கின்றோம்.

நம்முடைய நம்பிக்கைக்கு நிறைந்த பலன் தந்து ஆசீர்வதிப்பவர் அவரே. நம்பிக்கையை அதிகரிக்கத் தொடர்ந்து மன்றாடுவோம். நம்பிக்கையினால் நலம் பெறுவோம். நம்பிக்கையினால் வாழ்வடைவோம்.

**********